# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**<u>ஆணை நாள் – 09.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். NC.656/F/2024 (SA.9187/F/2024)

திரு S. பாஸ்கர் — மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர்
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு,
குரங்குச்சாவடி, சேலம் மாவட்டம் - 636 004. — பொது அதிகார அமைப்பு

<u>பார்வை:</u>

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 26.03.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 18.04.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 13.05.2024 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 23.05.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 09.07.2024 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 11.09.2024 |
| மனுதாரர் NC மனு தாக்கல் செய்த நாள் | 05.10.2024 |

*******

## <u>ஆணை</u>

இவ்வழக்கு இன்று (09.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு S. பாஸ்கர் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு மு. முத்துகுமரன், கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை க(ம)ப, சேலம் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சேலம் மாவட்டம், நெடுஞ்சாலைத்துறை க(ம)ப அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தங்களது அலுவலக க.எண்.521/2024/இவஅ1 நாள் 12.03.2024-ன்படி, 14.09.2023 அன்று நடைபெற்ற ஏல அறிவிப்பு நிபந்தனையின்படி 7 நாட்களுக்குள் ரூபாய்.3,53,800/- தொகையை 17.10.2023 வரை நிறுத்தி வைத்து பிறகு செலுத்தியதற்கான சான்றிட்ட சிறப்பு விதிகள் மற்றும் விதிவிலக்குகள் தொடர்பான நகல்கள், சேலம் நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டத்திற்குட்பட்ட சாலை சந்திப்பு விரிவாக்க பணி என்ற பெயரில் நெடுஞ்சாலைத் துறையினரால் அனுமதியின்றி முறையற்று வெட்டப்பட்ட பலன்தரும் உயிருள்ள புளிய மரங்களின் ஏல செயல்பாடுகள் குறித்த முழு விவரங்களை மொத்தம் 20 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு (SA.9187/F/2024) 11.09.2024 அன்று காணொளி காட்சி வாயிலாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாணையத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***“ 4. அன்றைய (11.09.2024) விசாரணையின் முடிவில், மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்கள் குறித்து, பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதுகிறது. மேலும், மனுதாரருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட தகவல்களை மீண்டும் 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது”.***

5. இந்நிலையில், இவ்வாணையத்தால் 11.09.2024 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையை பொதுத் தகவல் அலுவலர் நிறைவேற்றவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள இனம்-4-க்குரிய தகவலை தனக்கு முழுமையாக வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்து, மனுதாரர் 05.10.2024 தேதியிட்டு இவ்வாணையத்தில் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனு இன்று (09.04.2025) காணொளி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

6. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள இனம்-4-க்குரிய தகவல் முழுமையாக இல்லை என்றும், அத்தகவலை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

7. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்கள் வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

8. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்படும் இனம்-4-க்குரிய தகவலை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல் போதுமானது எனக்கருதுகிறது. மேலும், மனுதாரருக்கு வழங்கப்படும் தகவலில் ***'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு*** இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவலை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.NC.656/F/2024 (SA.9187/F/2024)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர்
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு,
குரங்குச்சாவடி, சேலம் மாவட்டம் - 636 004.

**<u>வழக்கு எண்.NC.656/F/2024 (SA.9187/F/2024)</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு S. பாஸ்கர், த/பெ. சண்முகம்,
எண்.32, மாரி வீதி,
ஆட்டையாம்பட்டி (அஞ்சல்),
சேலம் - 637 501.

Copy to: File.
SNPS / 11.04.2025